முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 584**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**05.05.2021**, புதன்கிழமை

1. ஞானிகள் துணைகொண்ட அரங்கா போற்றி
ஞான சபை கொண்ட தேசிகா போற்றி
வானவர்கள் போற்றி துணை நிற்கின்ற வள்ளலே
வாழுகின்ற ஞானியே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட அரங்கன் தர்மம் வழி
அகிலம் ஞான யுகமாற்றம் பெறும்
3. மாற்றம் தர வந்த மகா யோகி அரங்கன்
மக்களை காக்க வந்த மாதவசி தேசிகன்
உற்றதொரு அரங்கன் தொடர்பு கூட்டும் மக்கள்
உலகமாற்றம் செய்து மகிழ்வு பெறுவர்
4. மகிழ்வு தருகின்ற மக்களை காக்கின்ற
மகா சக்தியாக கலியில் இருக்கின்ற
அகிலத்தின் காப்பு நாயகன் ஆறுமுக அரங்கஞானி
அறத்தின் வழி வரும் மக்கள் மூலமே கலியுகம் மாற்றம் பெறும்
5. மாற்றம் செய்து மக்களை மீட்டு
மண்ணுலகில் ஞான ஆட்சி தருகின்ற
ஏற்றமிகு உயர் கொள்கை கொண்ட அரங்கன்
ஏழாம்படை வீட்டுத் தொடர்பே உலகோருக்கு நன்மை தரும்
6. நன்மை தர நச்சுக்கிருமி வழியான இடர்கள் விலகி
நமனுக்கு அஞ்சா சர்வ பலமும் பெற
அச்சமிலா அரங்கன் தர்ம வழியும்
அரங்கன் காட்டுகின்ற சன்மார்க்க வழியும் வருகவருக
7. வருகவே மக்களுக்கு பாதுகாப்பு
வையகத்தில் பேரிடர் துன்பம் அகன்று
முருகப்பெருமான் எந்தன் தயவோடு
முழுமையான பாதுகாப்புமிக்க உலகமாக இந்த கலியுகம் மாறும்
8. மாறுதலை செய்ய மகான் சுப்ரமணியர் யானும்
மகத்துவம்பட அரங்கனுள் கலந்திருக்க
ஆறுதலாய் அரங்கன் தொடர்பு தீட்சை பலம் அறத்தின் பலம் கொண்ட மக்களுக்கே
ஆறுமுகன் என் அருளும் ஆசியும் கிட்டும்

9. என்னருள் ஆசி கிட்ட கிட்ட
இவ்வுலகோர்க்கு அழியாமை என்கின்ற மகா சக்தி
நன்மைபட சடுதி கிட்டி நமனைவெல்லும் ஆற்றலும்
நச்சுகிருமிவழி துன்பங்கள் அகன்று பாதுகாப்பும் ஏற்றமும் தேற்றமும் உண்டாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.